1989 மே 2] (டாக்டர் மு. கருணாநிதி)

இதற்கு மேல் எப்படி பிரச்சினைகள் வளர்கின்றன என்பதை எண்ணிப் பார்த்துத்தான், அதைக் கவனித்துப் பார்த்துத்தான் மேலும் என்ன நடவடிக்கை எடுக்கலாம், இந்திய அரசை எப்படி அணுகலாம் என்பதைப் பற்றியெல்லாம் நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

4. அறிவிப்புகள்.

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை, மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவை, அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவை, அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக் கழகப் பேரவைகளுக்கு முன் மொழியப் பெற்ற உறுப்பினர்களின் பெயர்கள் பின் வருமாறு :

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை :

திரு. எம். அப்துல் லத்தீப்.
திரு. எம். சேட்டு.
டாக்டர் கோ. நந்தகோபால கிருட்டிணன்.
டாக்டர் க. காஞ்சனா
திரு. அ. இரகுமான்கான்
திரு. எஸ். டி. உகம்சந்த்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவை :

திரு. பெ. சீனிவாசன்
திரு. அ. லெ. சுப்பிரமணியன்.
திரு. ஆர். சிங்காரம்.
திரு. எஸ். ஆர். இராதா

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை :

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி
திரு. இ. புகழேந்தி.
திரு. குமரி அனந்தன்.

(பேரவைத் தலைவர்) [1989

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவை :

திரு. எம். இராமச்சந்திரன்.
திரு. எஸ். எஸ். தென்னரசு

அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு திரு. என். கணபதி அவர்களின் பெயர் முறையாக முன் மொழியப் பெற்றுள்ளது.

முன் மொழியப் பெற்றவர்களின் எண்ணிக்கையும், நியமிக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கையும் சமமாகவே இருப்பதால் மேற்குறிப்பிட்ட உறுப்பினர்கள் அந்த அந்தப் பல் கலைக் கழகப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பதை நான் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) கோயம்புத்தூரில் ஒரு நிறுவனம் உயிர்காக்கும் '' குளுகோஸ் திரவத்தில் கலப்படம் செய்து விற்பனை செய்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் உ. ரா. வரதராசன், யூ. கே. வெள்ளிங்கிரி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கோயம்புத்தூரில் இயங்கும் ஒரு நிறுவனம் நோயாளிகளுக்கு உட்செலுத்தும் உயிர்காக்கும், ' குளுகோஸ் திரவத்தில் ' கலப்படம் செய்து 30,000 பாட்டில்களை விற்பனை செய்துள்ளது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

மருந்து மற்றும் அழகு சாதன சட்டத்தின் கீழ் திருவாளர்கள் ' ஆஸ்லர்ஸ் ' பார்மா லிமிடெட்., பேரூர் மெயின் ரோடு, கோவை அவர்களுக்கு ஊசி மூலம் உட் செலுத்தப்படும் உயிர் காக்கும் குளுகோஸ் திரவம் தயாரிக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது.